**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**
**முன்னிலை : திருமதி.ஜா. ஆஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நத்தம்.**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம், சித்திரை திங்கள் 04 ம் நாள்**

குற்ற பல்வகை மனு எண். 102/2026
உள்
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.178/2025

1. சரசு
க/பெ.(லேட்) பால்சாமி
வேலம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,
நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

2. சரவணன்,
த/பெ.(லேட்.) பால்சாமி
வேலம்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல்,
நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். ... மனுதாரர்கள் / எதிரிகள்

/எதிர்/

அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள்,
நத்தம் காவல் நிலையம்,
நத்தம்.
குற்ற எண்.757/2021 ... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜோதிமணி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்து, இம்மனுவில் இன்று 17.04.2026 ல் இந்நீதிமன்றம் வழங்கிடும்...

J.Aafreen Begum Digitally signed by J.Aafreen Begum Date: 2026.04.17 19:50:40 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது பிரிவு 268(2) of BNSS ன் கீழ் மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் / புகார்தாரர் ஆரம்ப ஆதாரங்கள் இல்லாமலும், தகுந்த ஆவண சாட்சியங்கள் இல்லாமலும் தாக்கல் செய்துள்ள புகாரின் பேரில் எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 429 ன் கீழ் மேல் நடவடிக்கை எடுக்காமல் எதிரிகளை Discharge செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் / எதிரிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :</u>**

இவ்வழக்கின் வாதியின் நாய்க்கு மனுதாரரும், அவரது மகனும் சேர்ந்துதான் விஷம் வைத்தோம் என்பதற்கான கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் குறிப்பிடாமலும், தகுந்த ஆவண சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் வாதி யூகத்தின் அடிப்படையில் அளித்த புகாரை ஏற்று இந்த வழக்கின் இறுதி அறிக்கையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளது முதல் நோக்கிலே மனுதாரரும், அவரது மகனும் தான் குற்றம் புரிந்தவர்கள் என்பதை நிரூபிக்காத வண்ணம் உள்ளது என்றும், புகார்தாரர் இவ்வழக்கின் இறுதி அறிக்கையில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி விபரங்களில் 1–ம் சாட்சியாக வாதியும், 2, 3–ம் சாட்சியாக வாதியின் மகன்களும், 4–ம் சாட்சியாக வாதியின் உடன்பிறந்த சகோதரரான பிச்சைமணி என்பவரின் மகனான அருண் மற்றும் 5–ம் சாட்சியாக வாதியின் தாய்மாமா மகன் செல்வம் ஆகிய ஒரே குடும்ப சாட்சிகளை மட்டும் விசாரணை செய்து, முறையாக விசாரணை செய்யாமல் மனுதாரரும், அவரது மகனும் தான் குற்றம் புரிந்தவர்கள் என்று இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல.

2.2) இவ்வழக்கின் வாதி புகார் மனுவில் "கடந்த 03.08.2021–ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் நான் எனது தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு

செல்லும் போது எதிரிகள் இருவரும் வாதியை கிராஸ் செய்து தோப்பு பக்கம் சென்ற போது சரசு கையில் பச்சை நிற கேரிபேக்குடன் சென்றார் என்றும், அடுத்த நாள் காலை அவரது தோட்டத்தில் இருந்த இரண்டு நாய்களில் ஒரு நாய் மட்டும், வாயில் நுரை தள்ளி இறந்து கிடந்தது என்றும், அருகில் மேற்படி நபர்கள் கையில் முதல் நாள் கொண்டு சென்ற அதே பச்சை நிற கேரிபேக் கிடந்தது என்றும், அந்த கேரி பேக்கில் கோழிக்கறி இருந்தது, எனவே மேற்படி இருவரில் சரசு கையில் கொண்டு சென்ற பச்சை நிற கேரிபேக் இறந்த நாயின் அருகே கிடந்தது என்றும், எனவே தங்களுக்குள் உள்ள முன் பகையை மனதில் வைத்து கொண்டு கோழி கறியில் ஏதோ விஷம் வைத்து தனது நாயை கொன்று விட்டார்கள் என்றும் இந்த வாதி புகார் மனு அளித்திருப்பது, மனுதாரர்களுக்கும் வழக்கின் வாதிக்கும் இடம் சம்பந்தமாக இருந்த முன் பகை காரணமாக தங்களை பழிவாங்கும் நோக்கத்தில் ஏதோ ஓர் வகையில் இறந்த அவரது நாயை வைத்து பொய்யாக ஜோடிக்கப்பட்டு வழக்கின் வாதி இந்த புகார் மனுவை அளித்துள்ளார்.

2.3) இவ்வழக்கின் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் சாட்சிகள் விபரத்தில் 1-ம் சாட்சி மற்றும் வழக்கின் வாதியான துரைப்பாண்டி என்பவர் தனது சாட்சி விபரத்தில் கடந்த 03.08.2021-ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் வழக்கம்போல் தோட்டத்திற்கு சென்றுவிட்டு தானும், தனது மகன்கள் இளங்கதிரவன் மற்றும் உத்தமசோழனுடன் வீட்டிற்கு டார்ச் லைட் அடித்துக்கொண்டே வந்து கொண்டிருந்தபோது" என்று சொல்லியும், இவ்வழக்கின வாதி தனது புகார் மனுவில் "கடந்த 03.08.2021-ம் தேதி மாலை சுமார் 8.00 மணியளவில் வழக்கம் போல் தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு நான் வந்து கொண்டிருந்த போது எங்கள் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த எங்கள் ஊர் சரசு மற்றும் அவரது மகன் சரவணன் ஆகியோர் என்னை கிராஸ் செய்து தோப்பு பக்கம் சென்ற போது சரசு கையில் பச்சை நிற கேரிபேக்குடன் சென்றார் என்றும், நான் வீட்டிற்கு வந்து விட்டேன் என்றும்,

முன்னுக்கு முரணாக சொல்லியுள்ளதிலிருந்து இந்த புகார் மனு பொய் என்றும், மனுதாரர்களை பழிவாங்கும் நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டது என்றும் விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.4) இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையின் பார்வை மகஜரில் "சம்பவ இடமானது நத்தம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 5 Km வடக்கு திசையில் அமைந்துள்ளது. வேலம்பட்டியில் வழக்கின் வாதியின் மாந்தோப்பு உள்ளது, சம்பவ இடத்திற்கு வடக்கே மாமரங்கள் கிழக்கே தென்னை மரங்கள் மற்றும் வாதியின் 1/608/3 என்ற எண்ணுள்ள ஓட்டு வீடும், தென்கிழக்கு திசையில் மாமரத்தின் அருகே சிந்திய நிலையில் குருணை மருந்துகளும் காணப்பட்டன. தெற்கு திசையில் கிழக்கு மேற்காக செல்லும் மண் பாதையும் அதன் தெற்கு வரிசையாக தென்னை மரங்களும், தெற்கு திசையில் மாமரங்களும், மேற்கு திசையில் வடக்கு தெற்காக மாந்தோப்பிற்கு உள்ளே வரும் மண்பாதையும் அமைந்துள்ளது. இறந்து கிடந்த நாய் அருகே பச்சை நிற கேரி பேக்குக்குள் கிழிந்த நிலையில் கிடந்தது, கோழி கறி கால்கள் காணப்பட்டன. இவ்வாறாக சம்பவ இடமானது காணப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்கள். புகார்தாரர் மேற்படி பார்வை மகஜரில் சொல்லியுள்ளது பொய் என்பதற்கு சான்றாக இறந்த நாயின் அருகே கிழிந்த நிலையில் கோழி கறிகள் மட்டும் கால்களுடன் இருந்த "பச்சை நிற கேரி பேக்" இவ்வழக்கின் சொத்தாக சேர்க்காமலும் அதை கைப்பற்றி பராமரித்து அதனை ஆய்வுக்கு அனுப்பி அந்த பச்சை நிற கேரி பேக்குகுள் இருந்த கறிகளில் தான் Carbofuran என்ற விஷத்தன்மை கொண்ட மருந்து கலந்துள்ளது என்று ஊர்ஜிதப்படுத்தாத நிலையிலேயே இவ்வழக்கின் தன்மை உள்ளது. மேலும் புகார்தாரர் தங்களது இறுதி அறிக்கையில் தாக்கல் செய்துள்ள இறந்த நாயின் புகைப்படங்களில் நாயின் அருகே பச்சை நிறம் கொண்ட கேரி பேக் எதுவும் இல்லை என்பதிலேயே இவ்வழக்கின் வாதி அளித்த புகார் பொய் என்றும், அவர்

புகாரில் கூறியது போல் பச்சை நிற கேரி பேக்கில் கோழி கறிகள் எதுவும் இல்லை என்றும் தெரிய வருவதோடு புகார்தாரர் இவ்வழக்கின் வாதிக்கு ஏதோ ஓர் வகையில் உதவும் நோக்கத்தில்தான் வாதி கொடுத்த புகார் மனு உண்மை போல் இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

2.5) இவ்வழக்கில் வாதி தனது புகாரில் "கடந்த 03/08/2021-ம் தேதியன்று இரவு 8 மணியளவில் வழக்கம் போல் தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு நான் வந்து கொண்டிருந்த போது சரவணன் ஆகியோர் என்னை கிராஸ் செய்து தோப்பு பக்கம் சென்ற போது சரசு கையில் பச்சை நிற கேரி பேக்குடன் சென்றார்" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில் மனுதாரர்கள் அவ்வாறு சென்றிருந்தால் ஏற்கனவே இடம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு பேசி கொள்ளாமல் இருந்த தங்களை இந்த வழக்கின் வாதி எவ்வாறு மனுதாரர்கள் அவரது தோட்டத்திற்குள் செல்வதை அனுமதித்திருப்பார் (Groundless Allegations) உண்மையில் மனுதாரர்கள் கடந்த 03/08/2021-ம் தேதியன்று இரவு 8.00 மணியளவில் வாதியின் தோட்டத்திற்கு செல்லவுமில்லை, வாதி புகாரில் சொல்லி உள்ளது போல் அவரது நாய்க்கு விசமும் வைக்கவில்லை. அப்போது மனுதாரர்கள் ஊருக்குள் இருக்கும் தங்கள் வீட்டில் தான் இருந்ததகாவும், இந்த உண்மையை புகார்தாரரிடம் கூறியும் அதை பற்றி புகார்தாரர் முறையாக விசாரிக்காமல் வாதிக்கு ஏதோ ஒரு வகையில் உதவும் நோக்கில் மனுதாரர்கள்/எதிரிகள் மீது பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.6) புகார்தாரர் புகாரில் கூறியது போல் பிரிவு 429 I.P.C.ன் கீழ் மனுதாரர்கள் / எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை நிரூப்பிக்க அடிப்டை ஆதாரமாக சாட்சியங்களும், ஆவண சாட்சியங்களும் இல்லாத நிலையில் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகளின் கீழ் விசாரணை என்பது சரியல்ல.

புகார்தாரர் முழுமையான விவரம் கூறி அதனை நிரூபிக்க ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர்கள் / எதிரிகள் மீது இடப்பிரச்சனை சம்பந்தமாக உள்ள முன் பகை காரணமாக இவ்வழக்கின் வாதி ஏதோ ஓர் வகையில் இறந்த தனது நாயை வைத்து பழிவாங்கும் நோக்கத்தில் வாதி அளித்துள்ள புகாரை தள்ளுபடி செய்து மனுதாரர்கள் / எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இந்த வழக்கிலிருந்து Discharge செய்யுமாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) <u>அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம் :</u>

விடுவிப்பு மனுவில் (Discharge Petition) கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை, தேவையற்றவை, நிலைக்காதவை, தகுதியற்றவை மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சட்டரீதியாகவோ அல்லது உண்மைகளின் அடிப்படையிலோ எந்தத் தகுதியும் கொண்டிருக்கவில்லை என்றும், மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள இந்த மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். காவல் துறையினரால் பிரிவு 173(2) Cr.P.C–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை மற்றும் 161(3) Cr.P.C வாக்குமூலங்கள், இவ்வழக்கில் முதற்கட்ட ஆதாரம் (Prima Facie) இருப்பதையும், மனுதாரர்/எதிரி மீது குற்றச்சாட்டுப் பதிவு (Charge Frame) செய்ய வலுவான காரணங்கள் இருப்பதையும் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. பாதிக்கப்பட்ட புகார்தாரர் அளித்த புகாரின் பேரில், எதிர்மனுதாரர் வழக்கைப் பதிவு செய்து, விசாரணை நடத்தி, முறையான வகையில் எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவு 429–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். இதில் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, 6 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன, இறுதியாக எதிரிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மனுவில் உள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என மறுக்கப்படுகிறது. குற்றச்சாட்டுப் பதிவு செய்யும் தருணத்தில், ஆவணங்களின் நம்பகத்தன்மையை ஆழமாக ஆராய முடியாது என்பதும், அரசுத் தரப்பு கொண்டு வந்துள்ள ஆதாரங்களை உண்மையாகக் கருத வேண்டும் என்பதும் பலவழக்குகளில் மாண்புமிகு மேல் நீதிமன்றங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எதிரி குற்றம் புரிந்ததற்கான அடிப்படை அம்சங்கள் இருப்பதைக் காட்டும் வகையில் வலுவான சந்தேகம் (Strong Suspicion) எழுந்தாலே, நீதிமன்றம் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப் போதுமானதாகும். மனுவில் கூறப்பட்டுள்ளவை ஏற்கத்தக்கவை அல்ல. அரசுத் தரப்பு இந்த வழக்கின் விசாரணையை (Trial) நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். அதன் பிறகே, முக்கிய சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் குற்றம் நிரூபிக்கப்படுகிறதா இல்லையா என்ற முடிவுக்கு நீதிமன்றம் வர முடியும். நீதியின் நலன் கருதி, நீதிமன்றம் குற்றச்சாட்டைப் பதிவு செய்ய வேண்டும்.

3.3) எதிரிக்கு எதிராக முதற்கட்ட ஆதாரங்களும், முகாந்திரம் உள்ளது. முறையான வாய்மொழிச் சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் இறுதி அறிக்கையோடு தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிவுகள் மூலம் வழக்கை நிரூபிக்க அரசுத் தரப்பு தயாராக உள்ளது. BNSS பிரிவு 268(2)–ஐப் பரிசீலிக்கும்போது, இது வெறும் ஆரம்பகட்ட நிலையே ஆகும். சட்டக் கோட்பாடுகளின்படி, இந்த விடுவிப்பு மனுவைத் தள்ளுபடி செய்து, இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு எதிரி மீது குற்றச்சாட்டைப் பதிவு செய்யுமாறும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. அபிடவிட், மனு, எதிர் வழக்குரை மற்றும் வழக்கு கோப்பு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.17 19:51:21 +0530

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு பரிகாரம் அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதேயாகும்.

6) <u>தீர்வு</u>

எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது, இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சரசு மற்றும் அவரது மகன் சரவணன் ஆகியோர் நாய்க்கு விஷம் வைத்ததை யாரும் நேரில் பார்க்கவில்லை. சாட்சிகள் அனைவரும் வாதியின் நெருங்கிய உறவினர்கள், எனவே அவர்கள் தன்னிச்சையான சாட்சிகள் அல்ல. வாதி தனது புகாரில் இரவு 8 மணிக்குத் தான் மட்டும் வந்ததாகக் கூறியுள்ளார், ஆனால் இறுதி அறிக்கையில் தனது மகன்களுடன் வந்ததாக முன்னுக்குப் பின் முரணாகத் தெரிவித்துள்ளார். சம்பவ இடத்தில் இருந்ததாகக் கூறப்படும் "பச்சை நிற கேரி பேக்" மற்றும் "கோழிக்கறி" ஆகியவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. நாயின் புகைப்படத்திலும் அந்தப் பை காணப்படவில்லை. இடப் பிரச்சனை காரணமாக நிலவும் முன் பகை காரணமாகத் தொடுக்கப்பட்ட பொய் வழக்கு இது. எனவே, போதிய ஆதாரங்கள் இல்லாததால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

6.2) மாறாக, கற்றறிந்த அரசு தரப்பில் வழக்கறிஞர் வாதங்களின் போது, விசாரணை அதிகாரி முறையான விசாரணை நடத்தி, 6 சாட்சிகளை விசாரித்து, ஆவணங்களுடன் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், குற்றச்சாட்டுப் பதிவு (Framing of Charges) செய்யும் நிலையில், சாட்சியங்களின் உண்மைத் தன்மையையோ அல்லது தரம் குறித்தோ ஆழமாக ஆராயத் தேவையில்லை என்றும், எதிரிகள் மீது "வலுவான சந்தேகம்" எழுப்பக்கூடிய அளவிற்கு முதற்கட்ட ஆதாரங்கள் உள்ளன என்றும், மேல்நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, விடுவிப்பு மனுவை விசாரணை நிலையிலேயே

தள்ளுபடி செய்து, முழுமையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

6.3) விடுவிப்பு மனுவைத் தீர்மானிக்கும்போது, எதிரிகளுக்கு எதிராக வழக்கை நடத்துவதற்குப் போதிய அடிப்படை முகாந்திரம் உள்ளதா என்பது மட்டுமே காண வேண்டியுள்ளது. புகார்தாரரின் வாக்குமூலம் மற்றும் பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள், சம்பவத்தன்று எதிரிகள் அந்தப் பகுதியில் சென்றது மற்றும் அடுத்த நாள் நாய் இறந்து கிடந்தது ஆகியவற்றுக்கு இடையே ஒரு தொடர்பு (Chain of events) இருப்பதாகத் தெரிய வருகிறது.

6.4) மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டும் சாட்சிகளின் முரண்பாடுகள் மற்றும் பச்சை நிற கேரி பேக் கைப்பற்றப்படாதது போன்ற குறைபாடுகள் ஆகியவை விசாரணையின் போது சாட்சிகளிடம் குறுக்கு விசாரணை செய்து நிரூபிக்கப்பட வேண்டியவை. தற்போதைய நிலையில், புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6.5) அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது போல் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எந்த அடிப்படை ஆதாரமும் அற்றவை (Groundless) என்று தெரிந்தால் மட்டுமே நீதிமன்றம் மனுதாரரை விடுவிக்க முடியும். பிரிவு 173 Cr.P.C–ன் கீழ் காவல் துறை அனுப்பிய ஆவணங்கள், வழக்கைத் தொடரப் போதுமான காரணங்கள் இருப்பதாகக் காட்டினால், நீதிமன்றம் குற்றச்சாட்டைப் பதிவு செய்ய வேண்டும் என்று 1998(2) MLWN பக்கம் 372 (ஜெயராமன் எதிர் ஆய்வாளர் DCB, மதுரை) மற்றும் உச்ச நீதிமன்றத்தின் 1996 SCC பக்கம் 820 (மகாராஷ்டிரா எதிர் சோம்நாத் தாப்பா) ஆகிய தீர்ப்புகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒரு குற்றம் நடந்திருப்பதற்கான வாய்ப்பு இருப்பின், குற்றச்சாட்டைப் பதிவு செய்ய வேண்டும். வேறு விதமாகக் கூறினால், எதிரி இக்குற்றத்தைச் செய்திருக்கக்கூடும் என்று நீதிமன்றம்

நினைத்தாலே போதுமானது. இந்த ஆரம்ப கட்ட நிலையில் ஆவணங்களை முழுமையாகச் சீர்தூக்கிப் பார்க்க முடியாது, அரசுத் தரப்பு ஆவணங்களை உண்மையானவை என்றே கருத வேண்டும்.

6.6) மேலும் அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட (2014) 1 MLJ (Crl) 201 என்ற வழக்கில் விடுவிப்பு மனுக்களைக் கையாளும்போது நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது தொடர்பாக

1. எதிரிக்கு எதிராக முதற்கட்ட ஆதாரம் மற்றும் வழக்கைத் தொடரப் போதுமான காரணங்கள் இருப்பின் நீதிமன்றம் அதைக் கண்டறிய வேண்டும்.
2. குற்றச்சாட்டுப் பதிவு செய்யும் நிலையில் நீதிமன்றம் ஆழமான அல்லது தேடுதல் விசாரணையில் (Roving enquiry) ஈடுபடத் தேவையில்லை.
3. எதிரிக்கு எதிராகக் குற்றம் நடந்திருப்பதற்கான வலுவான சந்தேகத்தை நீதிமன்றம் உணர்ந்தாலே போதுமானது.
4. அரசுத் தரப்பு வழங்கிய சாட்சியங்கள் அல்லது ஆவணங்கள் எதிரியைத் தண்டிப்பதற்குப் போதுமானவையா என்று அவற்றின் மதிப்பீட்டைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அவசியம் நீதிமன்றத்திற்கு இல்லை.
5. குற்றச்சாட்டுகள் உண்மையா, பொய்யா என ஊகித்து விடுவிக்க வேண்டிய இடைநிலை நிலையில் நீதிமன்றம் இல்லை என்றும்,

6.7) (2015) 2 MLJ (Crl) 52 என்ற வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யும் போது, நீதிமன்றம் விரிவான விசாரணை நடத்த வேண்டிய கடமையில் இல்லை. வாக்குமூலங்களின் தொடர்பு அல்லது ஏற்புடைமை பற்றி ஆராயத்

தேவையில்லை. விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் முதற்கட்ட ஆதாரம் உள்ளதா என்று மட்டும் நீதிமன்றம் கவனித்து, குற்றச்சாட்டைப் பதிவு செய்து மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும்,

6.8) (2015) 2 MWN (Cr) 321 (SC) என்ற வழக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973, பிரிவுகள் 227 மற்றும் 228 – குற்றச்சாட்டுப் பதிவு செய்தல் – விடுவிப்பு – ஆவணங்கள் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப் போதுமானவையா என்று மட்டும் பார்க்க வேண்டும். விசாரணையைத் தொடரப் போதுமான ஆதாரங்கள் இருந்தாலே போதுமானது. ஆதாரங்கள் எதிரிக்கு எதிராக வலுவான சந்தேகத்தை எழுப்பினாலே விடுவிப்பு மனுவைத் தள்ளுபடி செய்யலாம் என்றும் எடுத்துரைக்கப்பட்டது இந்த மனு சங்கதிகளுக்கு பொருந்துவதாகவே உள்ளது. எதிரிகள் இக்குற்றத்தைச் செய்திருக்கக்கூடும் என்ற வலுவான சந்தேகம் இருந்தாலே அது குற்றச்சாட்டுப் பதிவு செய்யப் போதுமானது. அரசு தரப்பு சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும், மனுதாரர்கள் மீது வழக்குத் தொடரப் போதிய முகாந்திரம் இருப்பதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பிற்கு போதிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என்பதால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி தள்ளுபடி செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

J.Aafreen Begum Digitally signed by J.Aafreen Begum Date: 2026.04.17 19:51:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்.

**<u>இருதரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :</u> இல்லை**

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.17 19:51:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்.